THE TAMIL NADU LEGISLATIVE COUNCIL.

Tuesday, the 25th August 1970

The House met in the Council Chamber, Fort St. George, at four of the clock, Mr. Chairman (THE HON. THIRU C. P. CHITRARASU) in the Chair.

CONDOLENCE RESOLUTION ON THE DEATH OF THIRU O. P. RAMASWAMI REDDIAR, FORMER MEMBER OF THE LEGISLATIVE COUNCIL AND FORMER PREMIER OF THE COMPOSITE MADRAS STATE.

[*Note*.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

மிஸ்டர் சேர்மன்: மாண்புமிகு உறுப்பினர்களே, இன்று உங்களிடையே ஒரு துக்ககரமான செய்தியைச் சொல்லி, அதற்காக ஒரு இரங்கல் தீர்மானத்தைக் கொண்டு வர இருக்கிறோம். அதையொட்டி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், அடுத்து அந்தந்தக் கட்சியைச் சார்ந்த தலைவர்களும் தங்களுடைய இரங்கலுரையை ஆற்றுவார்கள் என்று சொல்லி இரங்கல் தீர்மானத்தை உங்கள் முன்னால் முன்மொழிகிறேன்.

முன்னாள் மாநிலப் பிரதமரும், நம் அவையில் 1946-ம் ஆண்டு முதல் 1969-ஆம் ஆண்டு வரையிலும் உறுப்பினராகவும் இருந்த திரு. ஓ. பி. இராமசாமி ரெட்டியார் அவர்கள் இன்று நண்பகல் சென்னையில் காலமான செய்தியை ஆழ்ந்த வருத்தத்துடன் இந்த அவைக்கு அறிவிக்கிறேன்.

இந்த அவையின் ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவிக்கும் வகையில் கீழ்க்கண்ட இரங்கல் தீர்மானத்தை இவ்வவையின் முன் கொணர்கிறேன்.

“இம் மாநிலத்தில் முன்னாள் பிரதமரும் இவ் அவையின் உறுப்பினராயிருந்தவருமான திரு. ஓ. பி. இராமசாமி ரெட்டியார் அவர்கள், இயற்கை எய்தியது குறித்து இவ்வவை தனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவிக்கின்றது. அன்னாரது குடும்பத்தினருக்கு தனது ஆழ்ந்த அனுதாபத்தையும் பரிவுணர்ச்சியையும் தெரிவித்துக் கொள்ளுகிறது.”

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: மாண்புமிகு தலைவரவர்களே, மறைந்த பெரியவர் ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் அவர்கள் தமிழ்நாட்டு மக்களுடைய உள்ளங்களில் தன்னுடைய எளிய வாழ்க்கை முறையினாலும், இந்திய விடுதலைப் போராட்டத்தில் ஆற்றிய தியாகச் செயல்களாலும், நல்ல நிர்வாகத் திறனாலும், நீங்காத ஓர் இடத்தைப் பெற்றிருப்பவர்களாவார்கள். அவர்கள் இன்று நம்மைவிட்டு மறைந்துவிட்டார் என்றாலும், தமிழ்நாட்டு மக்களுடைய நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கிற ஓர் பெரியவராவார்கள்.

1895-ஆம் ஆண்டு ஓமந்தூர் என்கின்ற ஓர் சிற்றூரில் பிறந்து 1926-ம் ஆண்டு இந்திய நாட்டினுடைய விடுதலைப் போராட்டத்தில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டு, அதன் தொடர்பாக நான்கு முறை சிறைச்சாலைக்குச் சென்றவர்களாவார்கள். 1946-ம் ஆண்டு முதல் 1969-ம் ஆண்டு வரையில் இம் மாமன்றத்தினுடைய உறுப்பினராக இருந்து அரும் சேவைகள் பலவற்றைச் செய்தவர்களாவார்கள். இந்தியா சுதந்திரம் பெற்ற ஆண்டான 1947-ம் ஆண்டு முதல் 1949-ம் ஆண்டு வரையில் அவர்கள் இணைந்திருந்த சென்னை மாநிலத்தினுடைய பிரதமராக--அப்போதெல்லாம் முதலமைச்சர் என்றில்லாமல் பிரதமர் என்கின்ற பெயரில்--பொறுப்பேற்று மிகத் திறம்பட அன்றைய சென்னை மாநிலத்தினுடைய நிர்வாகத்தை நடத்திப் புகழ் பெற்றிருந்தவர்களாவார்கள். அவர்களுடைய சொத்துக்களுக்கு வாரிசு இல்லையென்றாலும், வடலூர் வள்ளலார் இல்லத்தையே தன் வாரிசாக ஆக்கிக்கொண்டு, வடலூர் வள்ளலார் பெயரில் கல்வி நிறுவனங்களை உருவாக்கி அந்தக் கல்வி நிலையங்களுக்கு லட்சக் கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள தன்னுடைய சொத்துக்களையெல்லாம் எழுதி வைத்து, தமிழ்நாட்டிலுள்ள வள்ளல்களுக்கெல்லாம் வழிகாட்டியாகத் திகழ்ந்தவர்கள் ஆவார்கள் மறைந்த பெரியவர் அவர்கள். அப்படிப்பட்ட உத்தமர் இருந்து பணியாற்றிய இந்த அவையில் நாமெல்லாம் இருந்து பணியாற்றுகிறோம் என்பதில் பெருமைப் படுகிறோம் எனினும், அவர் இன்று நம்மைவிட்டுப் பிரிந்து விட்டார் என்ற ஆறாத துயரத்தில் அவருடைய நண்பர்களோடும் அவரோடு விடுதலைப் போராட்டத்தில் கலந்து கொண்ட பெரியவர்களோடும் அவர்கள் அனைவரும் கொள்ளுகிற துக்கத்தில் நானும் பங்குகொண்டு என் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து அமைகிறேன்.

* திரு. கே. ராஜாராம்: தலைவர் அவர்களே, இம் மாநிலத்தின் முன்னாள் பிரதமராக இருந்தவரும் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக இருந்தவரும் தமிழ் நாட்டிலுள்ள அரசியல் வாதிகளுக்கு ஒரு வழிகாட்டியாகத் திகழ்ந்தவருமான திரு ஓ. பி. ராமசாமி ரெட்டியார் அவர்கள் மறைந்தது குறித்து இம் மாநிலத்தில் கவலையுறாதார் யாருமே இருக்கமாட்டார்கள் என்று நினைக்கிறேன். அரசியல் வாதிகள் எத்தனை பெரியவராக இருந்தாலும், யாரேனும் தவறு செய்தால் கொஞ்சமும் அவருக்குப் பிடிக்காது. நேருக்கு நேராகத் தவறு செய்தவர்களைக் கண்டிக்கும் ஆற்றல் படைத்தவர். கொஞ்சமும் தாட்சண்யம் இல்லாமல் கடிந்துகொள்வார். அதனாலேயே அவர் தன்னுடைய அரசியல் வாழ்க்கையில், பதவியில் விருப்பம் கொள்ளாமல் அதை உதறி எறிந்துவிட்டுப் போய்விட்டார். அவ்வளவு

நேர்மையானவர். சத்தியத்திற்கும் நேர்மைக்கும் இருப்பிடமான ஒரு அரசியல்வாதி. தமிழநாட்டுக் காங்கிரஸ் கமிட்டித் தலைவராக அவர் தேர்ந்தெடுக்கப்பட்ட அன்றைக்குத்தான் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக்கு சுபாஷ்சந்திர போஸ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்போது சென்னைக்கு நாங்கள் எல்லாம் வந்து ஓட்டுப் போடவேண்டிய அவசியம் இருந்தது. நானும் சென்னைக்கு வந்து ஓட்டுப்போட்டேன். அவர் இங்கே பிரதமராக இருந்தபோது நம் நாடு சுதந்திரம் அடைந்தது. அவர் அடிக்கடி தனனுடைய வாழ்க்கையிலேயே மறக்க முடியாதது. "நாமெல்லாம் சண்டை போட்டு வாங்கிய சுதந்திரம் நான் பிரதமராக இருந்தபோது கிடைத்தது" என்பதுதான் என்னுடைய வாழ்க்கையில் சந்தோஷத்தைக் கொடுக்கக் கூடிய ஒரு நிகழ்ச்சியாக அமைந்ததாகக் குறிப்பிடுவார். இம்மாநில அரசிற்குச் சொந்தமாக ஒரு வான ஊர்தி வேண்டுமென்று அவர் விரும்பி வாங்கி, அதற்கு அனுமான் என்று பெயர் வைத்து, அமைச்சர்கள் டில்லிக்குப் போவதற்கும் வருவதற்கும் உபயோகித்து வந்தார். ஹைதராபாத் வழியாக ரயிலில் செல்கிறவர்களுக்கு பந்தோபஸ்து இல்லாமல் இருந்தது. அங்கெல்லாம் சர்க்கார் தொந்தரவு அதிகமாக இருந்ததால் அப்படி வான ஊர்தியில் சென்று வந்தார்கள். இன்னும் அவர் காலத்தில் பல நல்ல சீர்திருத்தங்களுக்குக் காரணமாக இருந்தார். அதையெல்லாம் உண்மையில் இந்த மாநிலம் மறக்கமுடியாது. அவர் காலமானார் என்ற செய்தி ஒரு மணிக்குத் தெரிந்தவுடன் அசெம்பிளியை ஒத்திவைத்து விட்டார்கள். அரசாங்கம் விடுமுறை அறிவித்துவிட்டது; இங்கேயும் நாமும் அதேமாதிரி செய்யலாம் என்று நானும் முதலமைச்சர் அவர்களும் பேசும்போது அவர்கள் முடிவு செய்தார்கள். எத்தனை செய்தாலும் திரு. ரெட்டியார் அவர்களுடைய சேவைக்கு ஈடு செய்ததாகாது. அவர் கடைப்பிடித்த வழியில் நேர்மை சத்தியம் தவறாமல் அரசியலில் நடந்துகொண்டால், அதுவே அவருடைய ஆன்மா சாந்தி அடைவதற்கு வழியாக இருக்கும். அவருடைய ஆன்மா சாந்தியடைய வேண்டுமென்று பிரார்த்தித்துக்கொண்டு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய இரங்கல் உரைக்குத் துணையாக நானும் இந்த வார்த்தைகளைக்கூறி அமருகிறேன். வணக்கம்.

* **திரு. சா. கணேசன்:** அவைத் தலைவரவர்களே, இன்றைய தினம் தமிழகத்தின் நேர்மை, சீலம் நிரம்பிய ஒருவருடைய பிரிவிற்காக பெருவருத்தம் தெரிவிக்கின்ற ஒரு நிலையிலே நாம் இங்கே இருக்கிறோம். அவருடைய திறமையை விட அவருடைய சீலம், அவருடைய நேர்மை, அவருடைய உள்ளொன்று வைத்து புறம் ஒன்று பேசாத அந்த ஒழுக்கத் தன்மை பெரிதும் பாராட்டத்தக்க, பாராட்டப்பட்ட ஒன்று.

அவருடைய ஆட்சிக்காலத்திலே தேசம் விடுதலை பெற்றதைப்பற்றி எத்துணை அவர் பெருமை அடைந்தாரோ, அதைப் போலவே மகாத்மா காந்தியடிகளுடைய அஸ்திக்கரைப்பிலே அவருக்கு இங்கே பங்கு ஏற்பட்டிருந்ததைப் பற்றி, "அந்த பாக்கியத்தை நான் பெற்றேன்" என்று சொல்லி மனம் ஓரளவுக்கு ஆறுதல் அடைந்தார். அவருடைய ஆட்சிக் காலத்திலே செம்மையும், பாரபட்சமில்லாத ஒரு நிலையும் இருந்ததை நாம் மட்டுமல்ல, நமது மாநிலத்தில் எல்லாக் கட்சிக்காரர்களும் மிகப் புகழ்ந்து அவர்களைப் பாராட்டி மகிழ்ந்தோம். இன்றைய தினம் அத்தகைய ஒரு சிறந்த பெருமகன் நம்மை விட்டுப் பிரிந்த நிலையிலே, அவர் தம் சிறந்த குணங்களை எண்ணி, அப்படிப்பட்ட பண்பாடுகளை நிரம்பப்பெற்று இன்னும் நமது மாநிலம் எல்லா வகையிலும் நலனும் பலனும் அடைவதற்கு உரிய வழிகளிலே நாம் முயலுவதன் மூலமாகத்தான் அத்தகைய பெரியோர்களுக்கு, உயர்ந்தோர்களுக்கு நாம் உண்மையான மரியாதையையும், வணக்கத்தையும் செலுத்த முடியும் என்பதில் அவையிலுள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் என்னுடன் இசைவார்கள் என்று நான் மனப்பூர்வமாக நம்புகிறேன். அத்தகைய ஒரு பெரியவர், நல்லவர், எல்லோருடைய பாராட்டிற்கும் உரியவரானவர் பின்னே பல காலமாக, அரசியலிலிருந்து விலகி விட்டேன் என்பதைப் பகிரங்கமாகத் தெரிவித்துக்கொண்டே இருந்தவர். அரசியல் சூழ்நிலை அவருடைய போக்கிற்கு ஒத்துவராத காரணத்தால் தான், "நான் எத்தகைய அரசியல் கட்சியிலும் தொடர்பு கொள்ளவில்லை" என்று 1952–53 முதலேகூட அவர் பகிரங்கமாகச் சொல்லிக்கொண்டும், எழுதிக்கொண்டும் இருந்தார். அதிலிருந்து நமது நாட்டில் அரசியல் நிலை எவ்வளவு வளர வேண்டும். வளம் பெற வேண்டுமென்றெல்லாம் அவர் உள்ளம் எண்ணி இருந்தது என்பதை நாம் நன்றாகப் புரிந்துகொள்ளலாம். அத்தகைய நிலைக்கு நாம் உயர வேண்டும், உயர்ந்து இன்னும் பல நன்மைகளையெல்லாம் நாம் பெற வேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்திலே நமக்கு நாமே உறுதி கொள்வது பயனுடையதாக இருக்குமென்று கூறி, கனம் முதலமைச்சர் அவர்கள் கூறிய கருத்துக்களுக்கு நானும் உடன்பட்டு, தலைவரவர்கள் கொணர்ந்திருக்கிற இந்தத் தீர்மானத்தை முழு மனத்தோடு ஆதரித்து அவருடைய ஆன்மா இறைவனடி நிழலில் அமைதி பெற மனப்பூர்வமாக பிரார்த்தித்து அமைகின்றேன்.

* THIRU A. R. DAMODARAN : Sir, it is with deep feeling of sorrow and regret that I associate myself with the resolution that has been moved by you. Amongst the few Gandhians who were alive, Thiru O. P. Ramaswami Reddiar was one of the most sincere and staunchest of all Gandhians. It is a great tragedy that for the past 7 or 8 years, because of a certain amount of bitterness that had been aroused in him on account of certain political conflict in the past, Thiru O. R. Ramaswami Reddiar steadfastly,

refused to get himself involved in any sort of political activity and as the Hon. the Chief Minister mentioned, the last years of his life were spent in Vadalur in promoting educational and charitable activities. I was a student in College, Sir, when the late Thiru O. P. Ramaswami Reddiar led the first Ministry in Independent India, in what was then known as the Composite State of Madras. He did not survive long in the political atmosphere that prevailed then and that was largely due to the fact that he was extremely straightforward in his dealings, and would not tolerate any sort of advantage being taken of him by members either of his community or even by those who called themselves citizens coming from his own district. In fact, he was so severe with the persons who came to him for favour that in his own district, he earned——I would not say enmity but——temporary disapproval of those who wanted to earn a great deal of favours from him when he was Chief Minister. That was why I mentioned that he was one of the true Gandhians who was alive and one of the most sincere and steadfast of true Congressmen. I pay my trbute to a man of honour, of dignity, of character and as I said there are very few indeed who are alive to day who can compare with him in his qualities of head and heart. I associate myself. Sir, with the sentiments that have been expresses by the leaders of the various parties.

* திரு. எம். ராஜா அய்யர் : தலைவரவர்களே, திரு. ராமசாமி ரெட்டியார் அவர்கள் இந்த பேரவையில் உரைகளை நிகழ்த்தி நீங்கள் கேட்டிருக்கின்றீர்கள். அவர் தன் எண்ணத்தில் இருக்கக் கூடிய, மனதில் இருக்கக் கூடிய எண்ணங்களை எல்லாம் நேர்மையாகவும், யாருக்கும் பயமில்லாத வகையிலும், பிறருக்கு எது நியாயம் என்பதை மறைக்காத வழியிலும், அதனால் விளைவுகள் என்ன என்று யோசிக்காது கூறிய ஒரு பெரியவர் என்று நான் கருதுகிறேன் இப்படி நாம் சொல்வதனால் பிறருக்கு மனம் புண்ணாகிறதே என்று அவர் ஒரு நாளும் எண்ணியதே இல்லை, நினைத்ததே இல்லை. ஒரு பெரியார், எல்லோரையும் போல அவர் இந்த உலகத்திற்குள்ளே சிறு குழந்தையாக நுழையும்போது அழுது கொண்டே நுழைந்தார். ஆனால் இன்று 12 மணிக்கு அவர் செல்லும்போது அவர் சிரித்துக்கொண்டே செல்லுகிறார். தான் வாழ்ந்த இடத்தை எவ்வளவு துன்பம் நேரிட்டாலும், சிறந்ததாக வைத்து விட்டுச்செல்லுகிறார். தான் பிறந்த ஊரை, தான் கண்ட உலகத்தை தான் காணும்போது இருந்ததைவிட மிகச் சிறந்த இடமாக ஆக்கிவைத்து விட்டு, அதைப் பார்த்து மனம் குளிர அவர் சிரிக்கச் சிரிக்க, நாமெல்லாம் மனம் நோக விட்டு விட்டு அவர் செல்லுகிறார். வாழ்க்கையினுடைய லட்சியத்தையே உலகுக்கு எடுத்து ஓதி விட்டு, அவர் மறைந்தார் என்று நான் கருதுகிறேன். முதலமைச்சர் அவர்களும் தாங்களும் கொண்டு வந்துள்ள இந்தத் தீர்மானத்தில் நானும் கலந்து கொள்கிறேன்.

*** திரு. எஸ். ஜெயராம ரெட்டியார்:** தலைவர் அவர்களே, மறைந்த திரு. ராமசாமி ரெட்டியார் அவர்களின் அன்பை அதிகமாகப் பெற்று வாழ்க்கையில் தன்னுடைய தரத்தை ஓரளவுக்கு உயர்த்திக் கொள்ள வேண்டுமென்று ஆசைப்பட்டவர்களில் ஒருவன் நான்.

தமிழ் நாட்டிலே திரு. தாமோதரன் சொன்னது போல, காந்தீயப் பரம்பரையில் வந்தவர்களில் எந்தக் கொள்கையையும் கொஞ்சம் கூட விட்டு விடாமல் கடைசி வரை கைக்கொண்டு வாழ்க்கை நடத்தியவர் அவர் ஒருவர்தான் என்பதில் சந்தேகத்துக்கு இடமில்லை.

தமிழ் நாட்டிலே உத்தமர் என்று யாரும் எண்ணக்கூடிய அளவுக்கு அவர் சீரிய முறையில் நல்லெண்ணத்தின் அடிப்படையில் தன் வாழ்க்கையை நடத்தி வந்தார்.

தன்னுடைய தரத்தையும், ஒழுக்கத்தையும் குறைத்துக் கொண்டு மற்றவர்களுடன் ஒத்துப் போக முடியாத காரணத்தால் தான், அவர் பிரதமர் பதவியிலிருந்து விலகினார். தன்னுடைய தரத்தைத் தாழ்த்திக்கொண்டு பதவியில் இருக்க விரும்பவில்லை என்று சொல்லிக்கொண்டு அந்தப் பதவியை உதறி விட்டுப் போய் விட்டார். அவர் பொறுப்பில் இருக்கும்போது, இது நல்லதைத் தருமா அல்லது இது தவறாக இருக்கிறதா என்று சீர்தூக்கிப் பார்ப்பது அவர் பழக்கம், தவறான காரியங்களில் அவர் ஈடுபட மாட்டார். அதனால் தான் 2 வருஷத்துக்குள் பிரதமர் பதவியிலிருந்து விலக வேண்டி வந்தது.

அத்தகைய பெரியார் மறைந்து விட்டார். கடைசி காலத்தில் தன்னுடைய சொத்துக்களை எல்லாம் வடலூர் வள்ளலார் இல்லத்துக்கு எழுதி வைத்தது மட்டுமின்றி, அந்த இல்லத்தை நடத்தி வைப்பதற்கு திரு. மகாலிங்கத்தைப் பொறுப்பாளராக நியமித்து விட்டுப் போய் இருக்கிறார். அந்த இல்லத்தை வளர்ப்பது நம்முடைய அரசின் கடமை. முதலமைச்சர் ஆவன செய்து அதற்கு ஊக்கம் அளிக்க வேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

4-20 p.m.

*** திரு. எஸ். எஸ். ராமசாமி படையாட்சி:** தலைவர் அவர்களே, இன்று முதலமைச்சரால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்த இரங்கல் தீர்மானத்தில் கலந்துகொண்டு இரண்டொரு வார்த்தைகளைச் சொல்ல நான் விரும்புகிறேன்.

காலஞ்சென்ற திரு. ஓ. பி. ராமசாமி ரெட்டியார் அவர்கள் என்னுடைய மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்று பெருமை கொள்ளுகிறேன். அவர் சிறந்த தேச பக்தர், நாட்டு விடுதலைக்காகப் பல முறை சிறை சென்றவர்.

[திரு. எஸ். எஸ். ராமசாமி படையாட்சி]

இந்த மாநிலத்தில் பிரதமராக இருந்து அரும்பெரும் பணியாற்றி இருக்கின்றார். அவர் உண்மையும், கண்டிப்பும் நிறைந்தவர். அதற்கு மாறாக இருக்கின்றவர்களை அவர் விரும்புவது இல்லை. விட்டுக் கொடுத்தோ அல்லது வளைந்து கொண்டோ தான், பதவியில் இருக்க வேண்டுமென்று விரும்பாதவர். அதனால்தான் பதவிப் பொறுப்பிலிருந்து விலகிக் கொண்டு தனித்திருந்தார்.

தமிழ் நாட்டில் அவர் ஓர் எடுத்துக் காட்டாகவே விளங்கி வந்திருக்கின்றார். அவ்வளவு உயர்ந்த பெரியார் இன்றைக்கு நம் மத்தியில் இல்லாமல் மறைந்து விட்டார்.

அவர் பதவியில் இருந்தபோது விவசாய மக்களுக்குப் பல நல்ல காரியங்களைச் செய்து தந்திருக்கின்றார். அத்தகைய பெரியவர் இன்று மறைந்து விட்டார். ஆகவே நானும் முதலமைச்சரின் தீர்மானத்தில் கலந்து கொண்டு என் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

* **திரு. எம். ஆறுமுகசாமி:** தலைவரவர்களே, இன்று மறைந்து போன முன்னாள் சென்னை மாநில பிரதம மந்திரி திருவாளர் ஓ. பி. ராமசாமி ரெட்டியார் அவர்களுடைய நல்ல பணிகளை எனக்கு முன்னால் பல்வேறு கட்சித் தலைவர்கள் எடுத்துச் சொன்னார்கள். திரு. ரெட்டியார் அவர்கள் பொது வாழ்க்கையிலே தூய்மையைக் கடைப்பிடித்தார். அவர்களுடைய சொந்த வாழ்க்கையில் எளிமையைக் கைக்கொண்டார். பதவிக்காக என்று தன்னுடைய கொள்கையை அவர் மாற்றிக் கொண்டதில்லை. சாதாரணமாகப் பதவி போன பிறகு, பலரும் மீண்டும் அந்தப் பதவியைக் கைப்பற்றுவதற்காக முயற்சிக்கும் உலகத்தில், பதவி போன பிறகும் இந்த நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரம் உயர வேண்டுமென்ற லட்சியத்திற்காக அவர் தன்னுடைய வாழ்நாளில் எந்த அளவிற்குக் காரியங்களைச் செய்ய முடியுமோ அந்த அளவிற்குச் செய்து கொண்டிருந்தார். ஒரு சராசரி மனிதன் பொது வாழ்வில் எந்தெந்த நற்பண்புகளை, நல்ல குணங்களைப் பெற்றிருக்க வேண்டுமோ அவைகளைத் தன் வாழ்க்கையில் அவர் பெற்றிருந்தார். அப்படிப்பட்டவர் மறைந்தது உண்மையிலேயே தமிழ் நாட்டிற்கு ஒரு பெரிய துரதிருஷ்டமாகும். அதோடு கூட இந்த மேலவையிலேதான் அவர் தன்னுடைய அரசியல் வாழ்க்கையில் பூராவும் உறுப்பினராக இருந்தார் என்பது நமக்கு இன்னும் வேதனையைத்தருகிறது. இந்த மேலவையில் 1946 தொடங்கி 1969 வரையில் அவர்கள் உறுப்பினராக இருந்தார்கள் என்பதைக் கேள்விப்படுவதில் நாம் அதிகம் துன்பம் அடைந்திருந்தாலும், நமக்கு அதில் பெருமையும் உண்டு. இந்த அவையில் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவுகளை நான் படித்துப் பார்த்திருக்கிறேன். பெரும்பாலும் அவர்கள் கிராமப்புறத்து உழவர்களின் நலன்களுக்காகவே தன் பேச்சுக்களைச் செலவழித்திருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக வானம் பார்த்த சீமையில் இருக்கிற மக்களின் துன்பங்களை, அவர்களின் துயரங்களை ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவர் எடுத்துக்காட்டி, அதனைப் போக்கு

வதற்கு வழிவகை காணவேண்டுமென்று அதிகமாகப் பேசி வந்திருக்கிறார்கள். இப்படிப் பேசிய அவர்களின் ஆத்மா இன்று அடங்கிவிட்டது. அவர்களின் மூச்சு இன்று நின்றுவிட்டது அப்படிப்பட்ட பெரியவர் மறைந்து விட்டதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் இந்தத் தீர்மானத்தில் பிரஜா சோசலிஸ்ட் கட்சியின் சார்பில் கலந்து கொண்டு எங்களின் இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. எஸ். அப்துல்வகாப்: தலைவரவர்களே, நமது மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சராக இருந்த திருவாளர் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் அவர்கள் மறைந்துவிட்டது குறித்து இரங்கல் தீர்மானத்தின் மீது பேசுவதில் நான் பெரிதும் வருத்தப்படுகிறேன். நான் சார்ந்திருக்கும் முஸ்லீம் லீக் கட்சியின் சார்பில் அன்னாரின் குடும்பத்திற்கு என்னுடைய ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர் இந்தச் சபையில் நான் உறுப்பினராக ஆனது முதற் கொண்டு—அதற்கு முன்பிருந்தே உறுப்பினராக இருந்தார். சுமார் 8 ஆண்டுகள் இருக்கும் என்று கருதுகிறேன். அவர் உறுப்பினராயிருந்த அந்தக் காலத்தில் 8 தடவை—உத்தேசமாகச் சொல்லுகிறேன்—அவர் இங்கே பேசியிருப்பார். அவர் அடிக்கடி பேச மாட்டார். எப்போதாவது ஒரு முறைதான் பேசுவார். ஆனால் அப்படி அவர் பேசும் பேச்சுக்கள் ஒவ்வொன்றிலும், அவர் அந்தக் காலத்து ஆளும் கட்சியைச் சார்ந்தவராக இருந்தபோதும், எதிர்க் கட்சியைச் சார்ந்தவர்கள் எவ்வளவு கடுமையாக ஆளும் கட்சியினரைச் சாடிப் பேசுவார்களோ அந்த முறையில் தாக்கிப் பேசுவதைப் பார்த்துப் நான் ஆச்சரியப்பட்டேன். ஏன் அவர் அப்படிப் பேசினார் என்று நினைத்துப் பார்த்தபோது, அவருடைய காலத்தில் அவர் நடத்திய நிர்வாகம் அவ்வளவு ஒழுங்காகவும், ஒழுக்கத்துடனும் இருந்த காரணத்தால், அவர் காலத்திற்குப் பிறகு பல சீர்கேடுகள் உருவெடுத்துவிட்டதைப் பார்த்துத் தான், அவர் அவ்வளவு கடுமையாக பேசியிருக்க வேண்டும் என்று நினைத்தேன். அவர் அவருடைய ஆட்சிக் காலத்தில் காங்கிரஸ் கட்சிக்குச் சம்பாதித்துக் கொடுக்க நல்ல பெயர் பின்னாலே கெட்டுவிட்டது அப்படி இந்த மாநிலத்திற்கே ஒரு நல்ல பெயரை வாங்கிக் கொடுத்த ஒரு பெரியவர் நம்மை விட்டுப் பிரிந்து விட்டது உள்ளபடியே நமக்கு வேதனை அளிக்கக்கூடிய ஒன்றாகும். இந்த மாநிலத்தில் பல சீர்திருத்தங்களைக் கொண்டு வந்த பெருமை அவரைத்தான் சாரும். குறிப்பாக நான் பார்த்த வரையில் கோவில் சொத்துக்கள் மடாதிபதிகளுக்குத்தான் சொந்தம் என்ற நிலைமையை மாற்றி, கோவில் சொத்துக்கள் அனைத்தையும் பொதுமக்கள் அனுபவிக்கக்கூடிய நிலையை உருவாக்கிய பெருமை ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் அவர்களைச்சாரும் என்று நான் சொல்லும்போது, பெருமிதம் கொள்கிறேன். அவருடைய மறைவிற்காக இரங்கி, அன்னாரின் மறுமை வாழ்வு நல்வாழ்வாக அமைய, எல்லாம் வல்ல இறைவன் அருள் புரியவேண்டும் என்று பிரார்த்தித்து என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்.

25th August 1970] [திரு. கே. எஸ். அப்துல் வகாப்]

மிஸ்டர் சேர்மன்: எழுபத்து ஆறு ஆண்டுகள் வாழ்ந்து, தமிழகத்தின் அரசியல் நிலைமைகளையெல்லாம நன்குணர்ந்து, அவருக்குப் பின்னால் தோன்றியவர்களுக்கு எல்லாம் அவர் ஒரு வழிகாட்டியாக, அக்கிரமங்களைக் கண்டு வழிபடாமலும், அநியாயங்களை கண்டு அஞ்சாமலும், தன்னுடைய வாழ்நாளில் பெரும் பகுதியை அரசியலில் கழித்துவிட்டு அந்தப் பெரியவர் நம்மை விட்டுப் பிரிந்துவிட்டார் என்று எண்ணுகிறபோது மனிதனுடைய வாழ்நாள் 100 ஆண்டுகள் என்று வைத்துக் கொண்டாலும் அதில் 76 ஆண்டுகள் வாழ்ந்த காலத்தை மிகப் பெரிய காலமாக எடுத்துக் கொண்டாலும், அன்றைய தினம் சாக்ரடீஸ் எதென்ஸ் நகரத்து நீதி மன்றத்தின் முன் நின்று கொண்டு, "72 வயது நிரம்பிய நான் இந்த நீதி மன்றத்தின் முன் குற்றவாளியாக இன்று நிற்கிறேன். மனிதனுக்கு 100 ஆண்டுகள் வாழ்நாள் என்று வைத்துக்கொண்டாலும், நான் வாழ்ந்த 72 ஆண்டுகள் மிகப் பெரிய காலமாகும். ஆனால் நித்திய தத்துவத்தோடு, அறிவில்லாத காலத்தோடு நான் வாழ்ந்த இந்த 72 ஆண்டு காலத்தை ஒப்பிட்டுப் பார்க்கிறபோது, அணுவுக்கும் அணுவாகத்தான் இது இருக்கும்" என்று சொன்னர். ஆக இப்பொழுது மறைந்த பெரியவர் இன்னும் ஒரு 24 ஆண்டுகள் உயிரோடு வாழ்ந்து இந்த நாட்டுக்குச் சேவை செய்வார் என்று அவரோடு இருந்து உழைத்தவர்களும், அவரைப் பின்பற்றி நடக்க வேண்டும் என்று ஆசைப்பட்டவர்களும், அவருடைய நேர்மையைக் கண்டு பாராட்டியவர்களும் இன்னும் பல்லாண்டுக் காலம் உயிரோடு இருக்கவேண்டும் என்று கருதிக்கொண்டிருந்த ஆயிரக் கணக்கான நண்பர்களோடும் நாமும் ஒருவராகச் சேர்ந்து கொண்டு அவர் மறைவிற்காக அனுதாபப்படுகிறோம். சமீப காலமாக அவரைப் பற்றி நாம் கேள்விப்பட்டதெல்லாம் அவர் உடல் நலமில்லாமல் இருந்தார், மீண்டும் உடல், நலமாக இருந்தார் என்பதாகும். நேற்றுக்கூட நண்பர்களோடு பேசிக்கொண்டிருந்தார். இன்று காலையில்கூட நண்பர்களோடு பேசிக்கொண்டிருந்தார், திடீரென்று 12 மணி அளவில் இறந்துவிட்டார் என்று பார்க்கிறபோது, இயற்கையின் கூற்றை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது என்று ஒப்புக் கொள்கிற மனித வர்க்கத்தில் நாமும் ஒருவராகத் தான் இருக்கிறோம் என்பதை உணர வேண்டியிருக்கிறது. அவருக்குக் காட்டும் மரியாதையாக, இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றும் வகையில் மாண்புமிகு அமைச்சர்களும் மற்ற உறுப்பினர்களும் 2 நிமிட நேரம் மௌனமாக எழுந்து நிற்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

Accordingly, the hon. Members stood in silence for a couple of minutes.

The Condolence Resolution was passed *nem. con.*, all the Members standing in silence for a couple of minutes.

மிஸ்டர் சேர்மன்: அவருடைய மறைவிற்கு அஞ்சலி செலுத்தும் வகையில் இந்த அவையை இதோடு ஒத்தி வைக்கிறேன். இவ்வவை மீண்டும் நாளை மாலை 4 மணிக்குக் கூடும்.

The House then adjourned.

4-30 p.m.

4-3 p.m.